சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.54/2025**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தீனதயாளன் | தொழில் | தறி வேலை |
| தந்தை பெயர் | திருமலை | ஜாதி | |
| கிராமம் | கொசப்பாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 78 |

**16.04.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 06.10.2022 தேதியிட்ட ரூ.1,00,000/-த்திற்கான அசல் கடனுறுதிச்சீட்டு **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.06.2023 தேதியில் ஆரணி தாலுக்கா காவல் நிலையத்தில் வாதி அளித்த புகாருக்கான புகார் ரசீது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.11.2024 தேதியிட்ட வாதி திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனுவை காவல் கண்காணிப்பாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.02.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 0403.2025ம் தேதி பிரதிவாதி தரப்பில் அனுப்பிய பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.